
# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் - 50 சித்திரை - ஆனி 2013

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06

அமுதம் 13 துளி 2

# மதமும் நாமும்

உலகின் சிறந்த மதங்களில் பெரும்பாலானவை சில குறிப்பிட்ட நூல்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. அவையே அந்த மதத்தின் அடிப்படையாக உள்ளன.

வேதாந்தக் கோட்பாடுகள் மாறாதவை. ஏன்? ஏனெனில் அவை மனிதனிலும் இயற்கையிலும் உள்ள மாறாத உண்மைகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளவை. அவை ஒருபோதும் மாறாது. சமயப் பழக்கங்கள் சமுதாயம் மாறும்போது மாறியே தீரும். எனினும் நமது மதத்தின் கோட்பாடுகள் ஒரு துளிகூட மாறாது. அவை அப்படியே இருக்கும்.




ஆன்மாக்களுக்குத் தோற்றமும் முடிவும் இல்லை. அவை இயல்பாகவே அமரத்துவம் வாய்ந்தவை என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோம். வேறுபாடுகள் எதுவுமின்றி ஒவ்வொரு மனிதனிலும் ஒவ்வொரு மிருகத்திலும் ஒரே ஆன்மா உறைகிறது. வேற்றுமை ஆன்மாவில் இல்லை, அதன் வெளிப்பாட்டிலேயே உள்ளது.

மனிதன் தன் கடந்தகாலக் கர்மங்களைக் கழிப்பதற்காகவே வந்துள்ளான். நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த விதியை உருவாக்குபவர்களாக இருக்கிறோம். நாம் துயருறுவதற்கு நாமேதான் காரணம், வேறு யாரும் அல்ல. நாமே விளைவுகள்; நாமே காரணங்கள். எனவே நாம் சுதந்திரர்கள். நான் விரும்பினால் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை இது காட்டுகிறது. நான் விரும்பினால் தூயவனாக இருக்க முடியும் என்பதையும் காட்டுகிறது. மனித சங்கல்பம் எல்லா சூழ்நிலைகளையும் கடந்து நிற்கிறது. அந்த வலிமையான, உறுதியான எல்லையற்ற சங்கல்பத்திற்கும் சுதந்திரத்திற்கும் முன்னால் எல்லா ஆற்றல்களும் - இயற்கையின் ஆற்றல்கள்கூட, கட்டாயம் தலை வணங்கியே தீர வேண்டும்; சேவகர்களாக வேண்டும். இதுதான் கர்ம நியதியின் விளைவு.

*- சுவாமி விவேகானந்தர்*

# பிரார்த்தனை



அநித்ய த்ருச்யேஷு விவிச்ய நித்யம்
தஸ்மின் ஸமாதத்த இஹ ஸ்ம லீலயா ।
விவேக வைராக்ய விசுத்த சித்தம்
யோஸௌ ஸௌ விவேகீ தமஹம் நமாமி ॥

*- சுவாமி ராமகிருஷ்ணானந்தர்*
*(விவேகானந்தர் துதி)*

கருத்து :

நிலையற்ற உலகிலிருந்து நிலையானதைப் பிரித்தறிந்து, அந்த நிலையானதில் மனத்தை மிகச் சுலபமாக வைத்திருப்பவரும் விவேகத்தாலும் வைராக்கியத்தாலும் தூய்மை உள்ளம் உடையவருமான விவேகானந்தரை நான் வணங்குகிறேன்.

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.

அமுதம் 13 துளி 2

## இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 1 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து... | 2 |
| 3. | வீரத் துறவியின் வழியினிலே... - கவிதை | 3 |
| 4. | உவந்து அளிப்பதே உயர்ந்தது - கதை | 4 |
| 5. | புண்ணிய நதிகள் | 5 |
| 6. | ஐந்தாண்டு மன்னன் - பாப்பா பாப்பா கதை கேளு | 8 |
| 7. | ப்ரச்ன உபநிடதம் | 10 |
| 8. | கலியுகக் கற்பகதரு | 14 |
| 9. | உடலைத் தளர்த்தும் பயிற்சிகள் - யோகம் | 17 |
| 10. | பாவத்திற்காக அழுத மகான் - படக்கதை | 19 |
| 11. | அழகுடன் தேன் சிந்தட்டும்... - கவிதை | 21 |
| 12. | தீயை வென்ற பாசம் - உண்மைச் சம்பவம் | 22 |
| 13. | புதுவருடத் தீர்மானங்கள் | 24 |
| 14. | கன்னியாகுமரியில் சுவாமி விவேகானந்தர் | 26 |
| 15. | எஜமானனைப்போல் இரு - கேட்டுச் சுவைத்தவை | 29 |
| 16. | அந்தணன் வாங்கிய ஆடு - பஞ்சதந்திரக் கதை | 31 |
| 17. | தோப்புக்கரணம் | 35 |
| 18. | சர்வதேசத்தில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் | 38 |
| 19. | செய்திகள் | 39 |
| 20. | குறுக்கெழுத்துப் போட்டி | |
| 21. | உங்கள் சிந்தனைக்கு... | |


## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

கன்னியாகுமரிப் பாறையில் அமர்ந்து சுவாமி விவேகானந்தர் சிந்தித்தார். அவர் செய்ய வேண்டிய பணிகள் அவருக்கு நிதர்சனமாயின. அவர் ஒரு இலட்சியத்துடன் தன் சாதனைப் பயணத்தைத் தொடங்கினார். அவரைப்போல் நாமும் இந்தப் புத்தாண்டில் தெளிவாகச் சிந்தித்து, திட்டமிட்டு எமது இலட்சியங்களை வகுத்துக்கொண்டு பயணத்தைத் தொடங்குவோம் . அதற்குத் துணைபுரியும் வகையில் வெளிவரும் இவ் இதழை பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

ஆக்கம்:- அ. ஹரீசன்

# வீரத் துறவியின் வழியினிலே...



வேற்று மண்ணிலே வேதம் சாற்றிய வீரத் துறவி! -எங்கள்
வேதங்களுக்குச் சுடரை ஏற்றிய வையத்து இரவி!
போற்றுவோம்! எங்கள் வீர விவேகானந்தர் நாமம் எங்குமே!-இந்த
பூமியில் நாம் வாழ்ந்து காட்டுவோம் அவரை நம்பியே!
மனித சேவைதான் புனிதம் என்றுதான் உரத்துச் சொன்னவர்!- 'இந்து
மக்கள் என்பதில் பெருமை கொள்' என உறுதி செய்தவர்!
குனிதல் இன்றியே நிமிர்ந்து நில் என வாழ்ந்து சென்றவர்!- அன்பு
கொண்ட வாழ்வுக்கு ஈடு இல்லையெனக் கூறி நின்றவர்!
'பண்பு வளர்ச்சியே சமயம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! - வீண்
பயத்தை நீக்கியே வீர இளைஞராய் நிமிர்ந்து செல்லுங்கள்!'
என்று உலகெலாம் எடுத்துச் சொன்ன எம் வீரத்துறவியே!-உங்கள்
இனிய வருகையால் பெருமையுற்றது எங்கள் பிறவியே!
வீழ்வதில்லை நாம்! விரைந்து செல்லுவோம்! உங்கள் பாதையில்- அந்த
விண்ணும் இடியலாம்! மண்ணும் மறையலாம்! தளர்வதில்லை நாம்!
சூழ்வதில்லை துயர்! நாமெல்லாம் தெய்வக் குழந்தை அல்லவோ?- இந்தச்
சேதி போதுமே! சோர்வதில்லை நாம்! ஏது தொல்லையே!

ஆக்கம்: G. பிரதிக்ஷா – தரம் 12, கொ/இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி.

## உவந்து அளிப்பதே உயர்ந்தது

முன்னொரு காலத்தில் புகழ் பெற்ற இசுலாமியத் துறவியாக ஜலால் என்பவர் விளங்கினார். அவருக்கு நிறைய சீடர்கள் இருந்தனர். அரசர்கள் பலரும் அவரை வணங்கி விலை உயர்ந்த பொருட்களைக் காணிக்கையாகத் தந்தனர். ஒருநாள் ஏழை உழவர்கள் இருவர் அத் துறவியைக் காண வந்தனர். அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினர். தாங்கள் உண்பதற்காக வைத்திருந்த கூழைக் காணிக்கைப் பொருளாகத் தந்தனர். மகிழ்ச்சியுடன் அதை வாங்கிய துறவி, அந்தக் கூழைக் குடித்தார். அவர்களும் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து சென்றனர். மீதியாக இருந்த கூழைத் தன் சீடர்களிடம் கொடுத்தார் துறவி. 'எவ்வளவு விலை உயர்ந்த பொருட்கள் நம் குருவுக்குக் காணிக்கையாக வந்துள்ளன. கூழைக் காணிக்கையாகத் தர இவர்களுக்கு எப்படி மனம் வந்தது!' என்று அதை அருவருப்புடன் பார்த்தார்கள் சீடர்கள். அவர்களின் மன நிலையை அறிந்த துறவி தம் சீடர்களுக்கு ஒரு கதை கூறினார்:

சீடர்களே! நாம் நாளும் வணங்கி வழிபடும் இறைதூதர் நபிகள் நாயகம் ஆவர். எதிரிநாட்டின் மீது படையெடுப்பதற்காக அவருக்குப் பெரும் பொருள் தேவைப்பட்டது. இதை அறிந்த பலர் தங்கள் சொத்தில் பாதியை விற்றுப் பணம் தந்தார்கள். அபூபக்கர்



தன்னிடம் இருந்த எல்லாப் பொருட்களையும் நபிகள் நாயகத்திடம் தந்தார். இப்படியே ஏராளமான பணம் சேர்ந்தது. ஏழைக் கிழவி ஒருத்தி தன் கையில் இருந்த நான்கு பேரீச்சம் பழங்களையும் சிறு ரொட்டியையும் காணிக்கையாக அவரிடம் தந்தாள். எளிமையான அந்தக் காணிக்கைப் பொருளைப் பார்த்து அங்கிருந்த பலர் சிரித்துவிட்டனர். சில மணிநேரம் கழித்து நபிகள் நாயகம் அவர்களைப் பார்த்து... (தொடர்ச்சி 35ஆம் பக்கத்தில்...)

-ஆக்கம்: சோ. பிரஷோபிதா-

# புண்ணிய நதிகள்

புண்ணிய நதிகளில் முதன்மையான கங்கை நதி எவ்வாறு தோற்றம் பெற்றது என்ற வரலாற்றின் முதற் பகுதியைக் கடந்த இதழில் வாசித்து அறிந்திருப்பீர்கள். 'ஸகரன்' என்ற அரசன் தவமிருந்து பெற்ற புதல்வர்கள் ஒரு முனிவரை அவமதித்ததால் எத்தகைய அழிவைச் சந்தித்தனர் என்பதையும் அவர்களை நற்கதி அடையச் செய்வதற்காக ஸகரனின் பரம்பரையில் வந்த 'பகீரதன்' எவ்வாறு முயற்சிக்கிறான் என்பதையும் பார்த்தோம். மூதாதையரின் பாப விமோசனத்திற்காகப் பலகாலம் தவம் செய்யும் பகீரதனின் முன் பிரம்மன் காட்சியளித்தார். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு கங்கையின் உதவியை நாடும்படி ஆலோசனை கூறினார்.



பிரம்ம தேவரின் அறிவுரைப்படி பகீரதன் கங்கையை நோக்கி அநேக ஆண்டுகள் தவம் புரிந்தான். கங்கை அவனுக்குத் தரிசனம் கொடுத்தாள். "ஹே ராஜனே! உனது தவத்தைக் கண்டு மெச்சினேன். என்ன வரம் வேண்டும் கேள், தருகின்றேன்" என்றாள். தாயே! உனது தரிசனத்தால் நான் தன்யனானேன். (தன்யன் என்றால் பாக்கியசாலி என்பது பொருள்). முனிவர் கபிலரின் சினத்துக்கு ஆளாகி அவரது கோபப் பார்வையால் என் முன்னோர்கள் சாம்பலாகிப் பல ஆண்டுகளாகிவிட்டன. இதுவரையும் அவர்களுக்கு நற்கதி கிடைக்கவில்லை. நரகத்தில் துன்பப்பட்டு வருகின்றார்கள். இதற்குத்தான் தங்கள் உதவியை நாடுகின்றேன். அருள்புரிய வேண்டும் தாயே!" என்றான். "இதில் என் உதவி யாது? விளக்கமாகச் சொல்" என்று கேட்டாள் கங்கை. "அம்மையே, எனது மூதாதையர்களது அஸ்தி எல்லாம் கரைக்கப்படாமல் பாதாள லோகத்தில் அப்படியே உள்ளன. தங்கள் அருளால்தான் அவர்கள்

கடைத்தேற முடியும். எனவே தாங்கள் பாதாளம் அடைந்து அங்கு பிரவாகிக்க வேண்டும். தங்கள் புனித நீருக்கு இணை ஏது? தயை செய்யுங்கள் அம்மா' என்று வேண்டி நின்றான். அதற்கு கங்கை, "பகீரத ராஜனே! உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய எனக்குப் பூரண சம்மதம். ஆனால் அதில் இடைஞ்சல் உள்ளது. நான் வானுலகிலிருந்து நதிரூபம் எடுத்துப் பூவுலகை நோக்கி வெகு வேகமாக விழும் போது என்னைத் தாங்கிக்கொள்ளும் சக்தி நம் இறைவன் சங்கரனைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. ஆகையால் பரமேஸ்வரன் இங்கு வருவதற்கு ஏற்பாடு செய். அப்போது மீண்டும் தோன்றுகிறேன்" என்று கூறி கங்காதேவி மறைந்தாள்.

கங்கையின் ஆலோசனையின்படி, பகீரதன் பரமேஸ்வரனை நோக்கித் தவம் செய்தான். முக்கண்ணனும் அவனது தவத்தை மெச்சி அவனுக்குத் தரிசனம் கொடுத்தார். அவனது கோரிக்கையின்படி கங்கையைத் தன் சடையில் தாங்கிக் கொள்ளச் சம்மதித்தார். இப்படியே வாழ்நாள் முழுவதும் தவத்திலேயே கழித்த பகீரதனின் பிரயத்தனம் பலனளிக்கத் தொடங்கியது. இறுதியில் 'கங்காவதரணம்' ஏற்பட்டது. அவதரணம் என்றால் 'வானுலகிலிருந்து கீழிறங்கி வருதல்' ஆகும்.



நிர்மலமான வான வெளியில் கங்காதேவி தோன்றி பூமியை நோக்கிப் பிரளயம் வருவதுபோல் வெகு உக்கிரமாக வந்தாள். பரமேஸ்வரன் அவளது வேகத்தைத் தணிப்பதற்காகத் தன் ஜடாமுடியை வலை போல் விரித்து அவளை மெதுவாக ஏந்திக் கொண்டார். "கங்காவதரணம்" நிகழ்ந்த காலம் கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பு என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வைகாசி மாதம் கிருஷ்ண பக்ஷம் ஸப்தமி திதியன்று அவள் பூமியை அடைந்தாள் என்பது அவர்கள் கருத்தாகும். இன்றும் வட இந்தியாவில் பல பாகங்களிலும் இந் நன்னாள் "கங்கா சப்தமி" என்று கோலாகலமாகக் கொண்டாடப் படுகின்றது.

முடியில் கங்கையைத் தாங்கிக் கொண்ட

கங்காதரன் தன் பக்தன் பகீரதனின் விருப்பப்படி முடியிலிருந்து ஏழு துளிகளை மாத்திரம் பூமியில் விட்டார். அத்துளிகள் ஹ்லாதினி, பாவனி, நளினி என மூன்று பிரிவுகளாகக் கிழக்கிலும், சுபிக்ஷு, சீதா, சிந்து என மூன்று பிரிவுகளாக மேற்கிலும் ஓடத் தொடங்கின. ஏழாவதான அலகநந்தா பகீரதனைத் தொடர்ந்தாள். பகீரதனைத் தொடர்ந்தவளே இன்றைய பகீரதி நதியானாள்.



இவ்வாறு அலகநந்தா பகீரதனைத் தொடர்ந்து செல்கையில் 'ஜன்னு' முனிவரின் ஆச்சிரமத்து யாக சாலை குறுக்கிட்டது. இத்தடங்கலால் கோபமுற்ற கங்கை தன் வெள்ளத்தால் யாக சாலையை மூழ்கடிக்க முயன்றாள். இதனால் கோபமடைந்த ஜன்னு மகரிஷி கங்கை ஜலத்தை மும்முறை ஆசமனம் செய்தார். வலது உள்ளங்கையில் நீரை எடுத்து மந்திரம் சொல்லி மும்முறை உறிஞ்சுதல் ஆசமனம் செய்தல் எனப்படும். முனிவர் ஆசமனம் செய்தவுடன் கங்கை மாயமாய் மறைந்துவிட்டது. சிறிது தூரம் சென்ற பகீரதன் திரும்பிப் பார்த்தான், கங்கை வரவில்லை. இதற்கான காரணத்தை உடனே அறிந்து ஜன்னு முனிவரை வணங்கி தனது பெரும் பணியை விளக்கினான். தயவு செய்து கங்கையை விடுவிக்க வேண்டினான். ஜன்னு முனிவர் சாந்தமடைந்து மனமிரங்கித் தனது வலது செவி மூலமாகக் கங்கையை விடுவித்தார். இதனால் கங்கைக்கு "ஜானவி" என்றும் பெயருண்டு.



மீண்டும் பகீரதன் வழிகாட்ட கங்கை பாதாளம் அடைந்து ஸகர புத்திரர்களின் அஸ்திகளைத் தன் தூய நீரினால் மூழ்கடித்தாள். இதனால் ஸகரபுத்திரர்கள் நற்கதி அடைந்தனர்.

தற்காலத்திலும் இறந்தவர்களின் அஸ்தியை கங்கையில் கரைத்து அவர்களது நற்கதிக்காகப் பிரார்த்திக்கும் வழக்கம் இந்துக்களிடம் உள்ளது. கங்கை விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு வந்ததால் மண்ணுலகில் இறந்தவர்களை விண்ணுலகிற்கு அவள் எடுத்துச் செல்வாள் என்ற நம்பிக்கையும் உள்ளது.

# ஐந்தாண்டு மன்னன்

தர்மபுரி என்ற நாட்டில் ஒரு விசித்திரமான சட்டமிருந்தது. அது என்ன தெரியுமா? யாராவது அந்த நாட்டின் மன்னனாக விரும்பினால் அவர் ஐந்து ஆண்டுகளுக்குத்தான் முடி சூடிக் கொள்ளலாம். ஆனால் ஐந்தாண்டுகள் முடிவடைந்த மறுநாளே, ஆற்றின் மறுகரையிலுள்ள, கொடிய விலங்குகள் நிறைந்த காட்டில் விட்டுவிடுவார்கள். இந்தப் பயங்கரமான சட்டத்தினால் யாரும் அந்தப் பதவிக்கு ஆசைப்படுவதில்லை. "எப்போதாவது மடியத்தானே போகிறோம். அதற்குப் பதில் மன்னனாகவே மடியலாமே" என எண்ணி யாரேனும் ஒரு சிலர் பதவியேற்பதுண்டு. பெரும்பாலும் அந்த அரியணை வெறுமையாகவே இருந்தது.

இவ்வாறு ஒருநாள், பதவிக்காலம் முடிவடைந்து ஆற்றின் மறுகரைக்குச் செல்ல வேண்டியிருந்த மன்னனை வழியனுப்ப மக்கள் அனைவரும் ஆற்றங்கரையில் திரண்டிருந்தனர். அந்த மன்னன் சிறந்த பட்டாடை அணிந்து, வைர நகைகள் தரித்து, தங்க வாள் ஏந்திக் கம்பீரமாகப் பவனி வந்தான். மன்னனைப் பார்த்த மக்களுக்கு ஒரே வியப்பு. "இன்னும் அரை மணி நேரத்தில் சாகப் போகிறான், அதற்கு ஏன் இவ்வளவு அலங்காரம்!" என்று தமக்குள் பேசிக் கொண்டனர்.



தயாராக நின்ற படகைப் பார்த்து, "மன்னன் செல்லும் படகா இது? பெரிய படகைக் கொண்டு வாருங்கள். நான் நின்றுகொண்டா செல்வது? சிம்மாசனத்தைக் கொண்டு வாருங்கள்" எனக் கட்டளையிட்டான்.

ஏவலாளர்களும் குழப்பத்தோடு, அவன் இட்ட கட்டளைகளை நிறைவேற்றினர். எல்லாம் தயாரான சிறிது நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அழகான படகில் மறுகரையை நோக்கிப் பயணமானான் மன்னன். மக்கள் திகைத்து நிற்க மன்னன் கையசைத்து மகிழ்ச்சியுடன் விடைபெற்றான். நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த படகோட்டி அதிர்ச்சியடைந்தான். இதுவரை அவன் மறுகரைக்கு அழைத்துச் சென்ற எல்லா மன்னர்களுமே அழுது புலம்பியவாறுதான் சென்றனர். இவனோ மகிழ்ச்சியுடன் இருக்கிறானே! என எண்ணிய படகோட்டி, மன்னனிடம், "மன்னா! எங்கே செல்கிறீர்கள் என்று தெரியுமா?" எனக் கேட்டான். அதற்கு மன்னன், "தெரியும். மறுகரைக்குச் செல்கிறேன்" என்றான்.



"அங்கே சென்றவர்கள் திரும்ப இந்த நகரத்திற்கு வந்ததில்லை தெரியுமா?" என்று கேட்டான் படகோட்டி. "தெரியும். நானும் திரும்ப இந்த நாட்டிற்கு வரப் போவதில்லை" என்று மிடுக்காகப் பதிலளித்தான் மன்னன். படகோட்டிக்கோ பயங்கரக் குழப்பம். "பின் எப்படி உங்களால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டான்.

மன்னன் சிரித்தவாறே, "நான் என்ன செய்தேன் தெரியுமா! ஆட்சிக்கு வந்த ஓராண்டு முடிவில் ஆயிரம் வேட்டைக்காரர்களைக் காட்டிற்கு அனுப்பினேன். அவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொன்றுவிட்டார்கள். இரண்டாமாண்டு முடிவில் ஆயிரம் விவசாயிகளை அனுப்பினேன். அவர்கள் காட்டைத் திருத்தி உழுதார்கள். இப்போதெல்லாம் அங்கு ஏராளமான தானியங்களும் காய்கறிகளும் கிடைக்கின்றன. மூன்றாமாண்டு முடிவில் ஆயிரம் கட்டடக் கலை வல்லுநர்களை அனுப்பினேன்.

(தொடர்ச்சி *14ஆம் பக்கத்தில்...*)

-ஆக்கம் ஜெ. காயத்ரி, தரம் 9-

# பிரச்ன உபநிடதம்

சென்ற இதழில் பிரச்ன உபநிடதத்தின் ஆரம்பப் பகுதி பற்றிப் பார்த்தோம். அறிவுத்தாகம் கொண்டு பிப்பிலாத முனிவரிடம் சென்ற ஆறு பேரைப் பற்றியும், அவர்களில் முதல் மூவரும் கேட்டுத் தெளிந்த விடயங்களையும் பார்த்தோம். இவ்விதழில் மற்ற மூவர் கேட்கும் கேள்விகளையும் அதற்குப் பிப்பிலாத முனிவர் கூறும் விடைகளையும் தெரிந்து கொள்வோம்

நான்காவது ஆளாக சூரியனின் பேரனான கார்க்கியன் முனிவரிடம் " தேவ முனிவரே,

(1) ஒருவன் தூங்கும்போது எந்தப் புலன்கள் உண்மையில் தூங்குகின்றன?

(2) அவன் விழித்திருக்கும் போது எந்தப் புலன்கள் விழித்திருக்கின்றன?

(3) எப்புலன்கள் கனவுகளைக் காண்கின்றன?

(4) ஆழ்ந்த தூக்கத்தில் இன்பத்தை அனுபவிப்பது எது?

(5) ஆழ்ந்த தூக்கத்தில் புலன்கள் அனைத்தும் எதில் ஒடுங்குகின்றன?"

என 5 கேள்விகளைக் கேட்டான்.



அதற்குப் பிப்பிலாத முனிவர் பின்வருமாறு கூறினார். "கார்க்கியா, சூரியனின் கிரணங்கள் பரவு-வதைப்போல், விழித்திருக்கும்போது புலன்கள் செயல்பட்டு புறவுலகுடன் தொடர்பு கொண்டு, அனுபவங்களைக் கொண்டு வருகின்றன. நகரம் ஆழ்ந்து தூங்கும் போது எரிகின்ற தெரு விளக்குகளைப்போல, மனிதன் தூங்கும் போது பிராண சக்திகள் செயல்படுகின்றன. கனவுகளைக் காணும் தேவனாக மனம் இங்கு விளங்குகிறது.

புறவுலக, அகவுலக அனுபவங்கள் இல்லாத மனம் ஆழ்ந்த தூக்கத்தில் இன்பத்தை அனுபவிக்கிறது. பகலில் இரை தேடச் சென்ற பறவைகள் இரவில் தத்தமது கூடுகளை நாடுவது போல் புறவுலக அனுபவங்களைப் பெற்ற புலன்கள் ஆழ்ந்த தூக்கத்தின் போது அனைத்திற்கும் ஆதாரமான ஆன்மாவில் ஒடுங்குகின்றன."

கார்க்கியனின் கேள்விகளைத் தொடர்ந்து சிபியின் மகனான சத்யகாமன் "முனிவரே! வாழ்நாள் முழுவதும் ஓங்கார மந்திரத்தை ஆழ்ந்து தியானிப்பவன் எந்த நிலையை அடைகிறான்?' எனக் கேட்டான்.

பிப்பிலாத முனிவர் சத்யகாமனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்:

"இறைவனுக்கு 2 நிலைகள் உள்ளன.

1) அருவ நிலை: உருவமற்றது. சிலரால் மட்டுமே இறைவனை இந்நிலையில் வணங்க இயலும்.

2) உருவ நிலை: நம்மால் சிந்திக்கக்கூடிய உருவில் பல்வேறு மங்கலமான குணங்களுடன் உள்ள நிலை.




இறைவனைப் போலவே ஓங்கார மந்திரத்திற்கும் 3 நிலைகள் உண்டு. அ, உ, ம் என்ற 3 எழுத்துக்களின் சேர்க்கையால் அமைந்தது ஓங்கார மந்திரம். இவை ஒவ்வொன்றும் "மாத்திரை' எனப்படுகின்றன. இம் மூன்று மாத்திரைகளும் மூன்று விதமான சாதனை நிலைகளைக் குறிக்கின்றன.

1) அ - பக்தி யோக சாதனைகள்

பிரார்த்தனைகள், ஜபம், துதிகள் போன்றவற்றை ஆழ்ந்த மன ஒருமைப்பாட்டுடன் செய்பவன் மரணத்திற்குப்பின் நீண்டகாலம் காத்திருக்காமல் அடுத்த பிறவியில் உயர் வாழ்க்கைக்கான சாதனைகளைத் தொடரும் சூழ்நிலையில் பிறக்கின்றான்.

2) உ - பக்தி, கர்ம யோக சாதனைகள்

பக்தியோக சாதனைகளுடன், பற்றின்றிச் செய்கின்ற நற்பணிகள், யாகம் போன்றவற்றைச் செய்பவன் மரணத்தின் பின் இன்பங்கள் அனுபவித்து மீண்டும் உலகில் பிறக்கின்றான்.


3) ம் - பக்தி, கர்ம, ஞான யோக சாதனைகள்

பக்தி, கர்ம யோகங்களுடன் இறைவடிவைத் தியானிப்பதே மூன்றாவது வகை. உருவநிலையில் இறை தியானம் செய்யும் போது அவர்களின் அருளும் இறை காட்சியும் கிடைக்கிறது.

இச் சாதனைகளில் ஒன்றை மட்டுமே எடுத்துக் கொள்ளாமல் நம் தேவைக்கும் தகுதிக்கும் ஏற்ப மூன்றையும் இணைத்துச் செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்."

இறுதியாக பரத்வாஜரின் மகனான சுகேசன் பிப்பிலாத முனிவரிடம் "முனிவரே, கோசல நாட்டு இளவரசனான ஹிரன்யநாபன் என்னிடம் 16 பகுதிகளையுடைய நபரைத் தெரியுமா எனக் கேட்டான். நானும் 'தெரியாது' என்றேன். அவன் சென்றுவிட்டான். இப்பொழுது அதே கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். 16 பகுதிகளையுடைய நபர் யார்?" என்று கேட்டான்.

பிப்பிலாத முனிவர் சுகேசனிடம் "மகனே, அந்த நபர் ஆன்மா. ஆன்மாவிலிருந்தே 16 பகுதிகள் தோன்றின. ஆன்மா பிராணனைப் படைத்தது. பிராணன், புத்தி, ஐம்பூதங்கள் (நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு), புலன்கள், மனம், உணவு அகியவற்றைத் தோற்றுவித்தது. உணவிலிருந்து ஆற்றல், தவம், மந்திரங்கள், கிரியைகள், உலகங்களும் உலகங்களின் பெயர்களும் படைக்கப்பட்டன.



இந்த 16 பகுதிகளிலிருந்தும் உருவாகின்ற ஒன்றே மனிதன். அந்த மனிதன் உண்மையை உணர்ந்து, ஆன்மாவை நாடி ஆன்ம அனுபூதி பெறும்போது இந்தத் தனித்துவம் மறைகிறது. நதிகள் கடலில் கலப்பது போல் தனிநபர் சம்பந்தப்பட்ட அனைத்தும் ஆன்மாவில் கரைகின்றன. 16 பகுதிகளுடைய நபர்

மரணமடைகிறார். ஆன்மா, பகுதிகள் அற்றதாக, மரணமற்றதாகத் திகழ்கிறது' என்று கூறினார்.

பிப்பிலாத முனிவர் இவ்வாறு ஆறு சீடர்களும் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்துவிட்டு, ''எனக்கு இவ்வளவே தெரியும். தெரிந்தவற்றை உங்களிடம் கூறினேன்' என்று பணிவுடன் தெரிவித்து அவர்களை வாழ்த்தினார்.

ஆன்ம அனுபூதி பெற்று, அதன் மூலம் மரணத்தை வெல்வதற்கு வழியைக் காட்டிய குருவாகிய பிப்பிலாத முனிவரையும், ஆன்மீக வாழ்க்கையை நாடுகின்ற அனைவருக்கும் அருள்புரியக் காத்திருக்கும் மற்ற மகான்களையும் வணங்கி ஆறு சீடர்களும் விடை பெற்றனர்.

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)



அவர்கள் வீடுகள், அரண்மனைகள், சாலைகள் எல்லாம் கட்டினர். நான்காம் ஆண்டு முடிவில் ஆயிரம் அதிகாரிகளை அனுப்பினேன். அவர்கள் கடந்த ஒரு வருடமாக நாட்டைச் சிறப்பாக நிர்வகித்து வருகிறார்கள். இந்த நாலாயிரம் பேரும் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கே வாழ்கின்றனர். இப்போது நான் காட்டிற்குப் போகவில்லை. என்னுடைய நாட்டிற்குப் போகிறேன். சாகப் போகவில்லையப்பா! வாழப் போகிறேன். அதுவும் மன்னனாக ஆளப்போகிறேன்!'' என்றான் மன்னன்.

மன்னனின் மதியூகத்தைக் கண்டு வாய் பேச முடியாது நின்றான் அந்தப் படகோட்டி! இந்த மன்னனின் வெற்றிக்குக் காரணம் என்ன? ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னும் மன்னனாக வாழ வேண்டும் என்று முடிவெடுத்து, அந்த முடிவினை அடைவதற்காகத் திட்டமிட்டு உழைத்ததே ஆகும்.

நாமும் ஒரு இலக்கை நிர்ணயித்து அதற்காக திட்டமிட்டு, திட்டமிட்ட பின் வெற்றி பெறும் வரை கடுமையாகவும் புத்திசாலித்தனமாகவும் உழைத்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்.


-ஆக்கம்: உ. சசிதரன்-

# கலியுகக் கற்பகதரு

திறந்தவெளியில் வயல்கள், குளிர்மையும் இதமும் தரும் மரங்கள், சில்லென்ற உணர்வைத் தரும் தெளிந்த நீரோடைகள், மந்தமாருதத்திற்கு வளைந்தாடும் நாணல்கள் என இயற்கையின்அழகு நிரம்பித் ததும்பி வழியும் காமார்புகூர் கிராமத்தில் இவற்றுக்கெல்லாம் சுருதி சேர்க்கும் வகையில் சுதிராமின் எளிய குடிலிலிருந்து எழுந்தது ஓர் மழலைக் குரல். அது வேறுயாருடையதுமல்ல, நம் கதாதரனுடையதுதான்! (இராமகிருஷ்ணரின் இளமைப் பெயர் - கதாதரன்). குழந்தையாகத் தவழ்ந்து கொண்டிருந்த கதாதரன் கதைக்க ஆரம்பித்து விட்டான்.

குழந்தை கதாதரனின் மழலை மொழி இனிமையும், சிறு வயதில் ஆராய்ந்து பகுத்தறியும் தன்மையும் திறனும் எல்லோரையும் கவர்ந்தன; குறிப்பாக சுதிராம் சட்டர்ஜியை. சுதிராம், கதாதரனுக்குத் தன்னுடைய முன்னோர்களின் பெயர்களையும் தேவதேவியர் பற்றிய பாடல்களையும் அவர்களை வழிபடும் முறைகளையும் எளிய முறையில் கூறுவார். மேலும் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றிலிருந்து அருமையான கதைகளைச் சொல்வார். இவ்வாறு சுதிராம் கூறும் விடயங்களை கதாதரன் ஒருமுறை கேட்டால் போதும். சுதிராம் கூறிய அனைத்தையும் தடுமாற்றமின்றி எந்நேரத்திலும் திருப்பிக் கூற அவனால் முடியும்.

அதேவேளையில் கதாதரனுக்கு சிலவற்றில் எந்தளவிற்கு ஆர்வமிருந்ததோ அந்தளவிற்கு அவனுக்கு பிடிக்காதவற்றில் எவ்வளவு தூண்டினாலும் ஆர்வம் உண்டாகவில்லை. கணிதத்தில், குறிப்பாகப் பெருக்கல் வாய்ப்பாட்டைச் சொல்லிக் கொடுக்கும்போது சுதிராம் இதனைக் கண்டுபிடித்தார். எனவே அவனை வற்புறுத்திக் கற்பிக்காமல் விட்டுவிட்டார். ஆனால் அவனது குறும்புகளையும் தொல்லைகளையும் சமாளிக்கவாவது அவனைப் பள்ளிக்கு அனுப்புவது என முடிவு எடுத்தார்.



ஏடு தொடுக்குதல் முதலிய சடங்குகளை நிறைவு செய்து சுதிராம் கதாதரனைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தார். பள்ளியில் தன் வயதொத்த சிறுவர்களைக் கண்டு கதாதரன் மகிழ்ந்தான். அவனது துடுக்குத்தனமும் நல்லியல்புகளும் விரைவிலேயே ஆசிரியர்களையும் அவன்பால் ஈர்த்தது. ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் கதாதரனை மிகவும் நேசித்தனர்.



மாந்தோப்பில் விளையாடும் கதாதரன்

கதாதரன் வளர வளர அவனது குறும்புகளும் கூடவே வளர்ந்தன. பள்ளி செல்வதற்குப் பதிலாக அவன் கிராமத்திற்கு வெளியே சென்று விருப்பம்போல் விளையாடுவான். அருகில் எங்காவது நடைபெறும் 'யாத்ரா' எனப்படும் திறந்தவெளி நாடகத்திற்கு யாருக்கும் தெரியாமல் சென்றுவிடுவான். சுதிராம் இதனையெல்லாம் அறிந்திருந்தும் கதாதரனைக் கண்டிக்கவில்லை. அதற்குக் காரணம் தன்னிச்சையாக இருப்பது ஒரு மனிதனை உயர்த்தும் என்பதோடு மட்டுமின்றி, கதாதரனிடம் இயல்பாக விளங்கிய சில அடிப்படைக் குணங்களும்தான். குறிப்பாக, கதாதரன் செய்யத் தொடங்கிய எதனையும் செய்து முடிக்கும் வரை அவனால் ஓய்ந்திருக்க முடியாது. தவறு செய்தாலும் அவற்றைப் பொய் சொல்லி மறைப்பதில்லை. எல்லாவற்றிக்கும் மேலாகப் பிறருக்குத் தீங்கு செய்யும் எண்ணம் அவனிடம் சிறிதும் இல்லை.

இவ்வாறான நல்லியல்புகளுடன் சேர்த்து, எதனையும் பகுத்தறியும் தன்மையும் கதாதரனிடம் காணப்பட்டது. கதாதரன் தான் செய்பவை பிழையென்று உணர வேண்டுமானால் அவன் அறிவிற்கு விளங்கும் வகையில் விளக்க வேண்டும். ஒன்றைச் செய்ய வைக்க வேண்டுமானாலும் இதேநிலைதான். எனவே சுதிராம், கதாதரனுக்கு இந்து சமுதாயக் கட்டமைப்பில்

காணப்படுகின்ற சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்க வேண்டியமைக்கான காரணங்களையும் கடைப்பிடிக்கும் முறைகளையும் பொறுமையாக எடுத்துக் கூறுவார்.

இவ்வாறு கதாதரனின் சிறுபராய வாழ்க்கை கழிந்துகொண்டிருந்த வேளையில் கதாதரனுக்கு ஓர் உன்னத அனுபவம் வாய்க்கப்பெற்றது. அது இயற்கையின் அழகில் தன் உணர்வை இழந்து அதனுடன் ஒன்றிப் போகும் நிலை. ஒரு நாள் கதாதரன் வழமைபோல் வயல் வெளி ஒன்றில் உல்லாசமாகச் சென்றுகொண்டிருந்தான். அது மழைக் காலம். மழை மேகங்கள் திரண்டு வானம் கறுப்பாகக் காட்சியளித்தது. அதன் கரியவண்ணம் கதாதரனை வெகுவாகக் கவர்ந்தது. அவன் அதில் இலயித்து நின்றபோது அந்தக் கருமையைக் கிழித்து விடுவதுபோல எங்கிருந்தோ சில வெண்ணிற நாரைகள் சிறகுகளை விரித்துப் பறந்து சென்றன. கரிய வானம், அதில் வெண்ணிற நாரைகளின் ஊர்வலம். இயற்கையின் இந்த எதிர்வண்ணக் கோலம் கதாதரனைத் தன்வயமிழக்கச் செய்து விட்டது.


கதாதரனின் பரவசம்

பிற்காலத்தில் இறையுணர்விலேயே சதா சர்வ காலமும் வாழப்போகின்ற சிறுவன் இயற்கையின் எழிலில் ஒன்றி, சுய-நினைவிழந்து நிலத்தில் வீழ்ந்தான். கதாதரனின் இந்நிலையைக் கண்டு அவனது பெற்றோரும் சுற்றத்தாரும் கலங்கினர். ஆனாலும் இதன் பிறகும் அவனது வழமையான உற்சாக நிலையைக் கண்டு ஆறுதல் அடைந்தனர்.

சிறுவன் கதாதரனின் ஆன்மீக அனுபவங்களை மீண்டும் அடுத்த இதழில் பார்ப்போம்...

-ஆக்கம்: இ. பிரகலாதன்-

# யோகம்

## - உடலைத் தளர்த்தும் பயிற்சிகள் -

கடந்த இதழில் உடலைத் தளர்த்தும் பயிற்சிகளில் சிலவற்றைப் பார்த்தோம். கால் விரல், கணுக்கால்-முழங்கால், இடுப்பு ஆகிய பகுதிகளுக்கான பயிற்சிகளை முயற்சி செய்து பார்த்திருப்பீர்கள். இவ்விதழில் ஏனைய பாகங்களுக்கான பயிற்சிகளையும் அவற்றின் பிரிவுகளையும் பார்ப்போம்:

### 4. தோள் மூட்டு - Shoulder Stretching



(i) ஒவ்வொரு கையையும் தனித் தனியாக முதலில் முன்னிருந்து பின்னாக ஐந்து தடவைகளும் அதன் பின் பின்னிருந்து முன்னாக ஐந்து தடவைகளும் பக்கவாட்டில் சுற்றுதல்.



(ii) இரு கைகளையும் ஒரே நேரத்தில் முன்னிருந்து பின்னாக ஐந்து தடவைகளும் அதன் பின் பின்னிருந்து முன்னாக ஐந்து தடவைகளும் பக்கவாட்டில் சுற்றுதல்.



(iii) கை விரல்களை ஒன்றாகச் சேர்த்து தோள் மூட்டில் வைத்துக் கொண்டு முழங்கையை முன்னிருந்து பின்னாக ஐந்து தடவைகளும் அதன் பின் பின்னிருந்து முன்னாக ஐந்து தடவைகளும் பக்கவாட்டில் சுற்றுதல்.


### 5 .கழுத்து - Neck Stretching

(i) கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு கழுத்தை வலஞ்சுழி இடஞ்சுழியாகச் சுற்றுவது.





(ii) கழுத்தை மேலே, கீழே, இடது, வலது இவ்வாறான வழிகளில் அசைப்பது.



**6. வயிறு - Stomach Stretching**

(i) வழமையாகப் படுப்பது போல், நிலத்தில் கைகளை நீட்டியவாறு மேலே பார்த்தவாறு படுத்திருக்க வேண்டும். பின்பு கைகளை விசையாகத் தூக்கி முன்னெழும்பி, கால் விரல்களைத் தொட வேண்டும். பின்பு அப்படியே பின்னால் மெதுவாகச் சென்று படுக்க வேண்டும்.



(ii) முன்னையது போல, இப்பொழுது முழங்கால்களை மடித்து வைத்துக்கொண்டு, கைகளை விசையாகத் தூக்கி முன்னெழும்பி, கால் விரல்களைத் தொட வேண்டும். பின்பு அப்படியே பின்னால் மெதுவாகச் சென்று படுக்க வேண்டும்.



(iii) இப்பொழுது முழங்கால்கள் மடித்தவாறு இருக்க, கைகளைத் தலைக்குப் பின்னால் வைத்துப் பிடித்தவாறு விசையாக எழும்பி மூக்கால் முழங்கால்களைத் தொட வேண்டும்.





இம் மூன்று செய்கைகளையும் தனித் தனியாக 10 முறை செய்யலாம். இல்லாவிடில் முதலில் 05 தடவைகள் செய்யலாம். பின்பு படிப்படியாக எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்ளலாம். மூன்று பயிற்சிகளையும் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து செய்ய வேண்டும். தொந்தியைக் குறைப்பதற்கு இந்தப் பயிற்சி மிகவும் உகந்ததாக இருக்கும். கடந்த இதழில் வெளியான மூன்று உடலைத் தளர்த்தும் பயிற்சிகளோடு இந்த மூன்று பயிற்சிகளையும் செய்து முடித்தவுடன் சவாசனத்தில் இருந்து நன்றாக ஓய்வெடுக்க வேண்டும். குறைந்தது 03 நிமிடங்கள் ஓய்வெடுத்தால் நல்லது.

-கதை: சி. அபிராமி-

## பாவத்திற்காக அழுத மகான்

-படம்: ம. ஆரணி-




6
பணிமுடிந்துதும் கோயிலுக்குச் சென்று பெருமானை வணங்கினார்.
சேவை செய்யும் பேறுபெற்றேன். என்ன பாக்கியம்... எல்லாம் உன் அருள்!
7
தீர்த்தம் பெறுவதற்காகக் கையைநீட்டியபோது...
அடடா! மோதிரத்தை எங்கேயோ வைத்துவிட்டு வந்துவிட்டேனே!
8
உடனே சென்று மோதிரத்தை வைத்த இடத்தில் தேடினார்.
எங்கும் காணவில்லையே...என்ன சோதனை இது!
9
நேரே சந்நிதிக்குச் சென்று அழ ஆரம்பித்தார்.
"இறைவா, என் கவனக் குறைவால் மோதிரத்தைத் தொலைத்தேன். ஆனால் அதன் மேல் ஆசைப்பட்டு யாரோ அதை எடுத்துவிட்டார்கள். அவர்கள் பாவம் செய்வதற்குநான் காரணமாகிவிட்டேனே!
10
பக்தன் மனம் வருந்துவதைப் பொறுக்காத பெருமாள் அவருக்குக் காட்சிகொடுத்தார்.
பக்தா சோதிப்பதற்காக மோதிரத்தை மறைத்தேன். பிறருக்குப் பாவம் சேர்ந்து விடுமே என்று வருந்தும் உனக்கு எப்போதும் என் ஆசிகள் உண்டு
இதய பூர்வமாகக் காரியங்கள் செய்பவனுக்கு எப்போதும் இறைவன் உதவிபுரிகிறார். அமைதிக்காக உழைத்து அமைதியுடன் வாழ்பவர்களே உண்மையில் பாக்கியசாலிகள். உன் சுக துக்கங்களை மறந்து பிறர் நலனில் அக்கறைகொள். அன்பு பலனளிக்காமல் போவதில்லை.
– சுவாமி விவேகானந்தர் –


அறநெறி அமுதத்தை வாசித்துப் பயன்பெற்ற வாசகர்களில் ஒருவரான, வவுனியா-கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 12ஆம் தர மாணவி செல்வி பி. வேதிகா, அறநெறி அமுதம் பற்றி எழுதி அனுப்பிய கவிதை.

## அழகுடன் தேன் சிந்தட்டும்






இனிக்கும் தேனின் சுவை அமுதம் - இது
அன்பிற்கு சுவை சொல்லும் குமுதம்.
அறிவிற்கு அறிவூட்டும் அமுதம் - இது
அன்பிற்கு முகவரி சொல்லும் சமூகம்.

வியக்க வைக்கும் ஆக்கங்களால்
விந்தை சொல்லும் அறிவமுதம்
அறிவுடன் வாழவைத்து எம்மை
ஆக்கிடும் சுடர்மிகு மனிதர்களாக..

முத்தெய்வ தரிசனம் தந்திடும் - இது
முக்காலத்திற்கும் வழி சொல்லிடும்
வண்ண வண்ண வழியில் வந்து
வாழ்க்கைத் தத்துவம் சொல்லிடும்.

துளி ஒன்று பருகினாலே மனதினில்
துளிர்த்திடும் அறிவு பசும் புற்களாய்...
அமுதம் ஒன்று அருந்தினாலே
அறிவுக் கடல் அலைமோதும்...


நம்பிக்கையால் வாழ்வை உயர்த்தி
வருகின்ற வெற்றிகளை எமதாக்கும்
கற்பகதருவாம் பகவான் இராமகிருஷ்ணரின்
கற்பனையில் வந்த அமுதத் துளி
அழகுடன் தேன் சிந்தட்டும்....!



தொகுப்பு:- சி. துர்க்கா

# தீயை வென்ற பாசம்

18ஆம் திகதி மார்ச் மாதம் 2011 இல் அமெரிக்காவில் *நியூபேர்க் கென்ருகீ* (newburg Kentucky) என்ற இடத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் பத்து வயதுடைய சிறுவனான *அன்டொய்ன் பேர்க்ஸ்* (Antoine Burks) தனது பாசமிகு ஆறு வயதுத் தங்கையான *ட்ரினிடியை* (Trinity) காப்பாற்றுவதற்காக நிகழ்த்திய வீரச்செயல் இவ்விதழின் உண்மைச் சம்பவத்தை அலங்கரிக்கின்றது.



*அன்டொய்ன்* தன் மூன்று தங்கைகளுடனும் தாயாருடனும் தனது வீட்டில் வசித்து வந்தான். தீ விபத்து நடக்கும் முன் *ட்ரினிடி* தனது பாதணிகளை இரசாயனப் பூச்சினால் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். திடீரென இவள் பயன்படுத்திய பூச்சு விளக்கில் (lamp) தெறித்து தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. தீ விரைவாகப் பரவத் தொடங்கியது.

தீப்பற்றி எரிய ஆரம்பித்ததும் வீட்டில் இருந்த *அன்டொய்னின்* தாயாரும் மற்ற இரு தங்கைகளும், *அன்டொய்னுடன்* மிக விரைவாக வெளியே ஓடித் தப்பினார்கள். *அன்டொய்ன்* வெளியே தப்பித்தபொழுதும் காலில் தீப்பிடித்துக்கொண்டது. அவனது தாயாரும் இரு தங்கைகளும் எவ்விதத் தீக்காயமும் இன்றித் தப்பித்தனர்.




*அன்டொய்ன்* வெளியே தப்பித்தபின் தனது மற்றச் சகோதரியான *ட்ரினிடியைத்* தேடினான். அப்பொழுதுதான் *ட்ரினிடி* எரியும் வீட்டுக்குள் அகப்பட்டுவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்டான்.

நம் எல்லோருக்கும் தீ என்றால் பயம் அல்லவா? ஆனால் இவனோ தன்னுடைய கால் தீயினால் எரிந்து கொண்டிருப்பதையும் பொருட்படுத்தாது எரியும் வீட்டிற்குள் புகுந்து தங்கையைக் காப்பாற்றினான். எனினும் *ட்ரினிடிக்கு* முகத்திலும் கைகளிலும் தீப்பிடித்துக் கொண்டது. *அன்டொய்னும் ட்ரினிடியும்* வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு எரிகாயங்களுக்குச் சிகிச்சை பெற்றனர்.



*அன்டொய்ன்* தனது துணிச்சலான செயல் பற்றிக் கூறுகையில், "*ட்ரினிடிக்கு* ஏதாவது தீங்கு நடந்தால் அது என்னுடைய பிழை என்றும் அவளைக் காப்பாற்ற வேண்டியது மூத்த அண்ணனாகிய என்னுடைய கடமை என்றும் உணர்ந்தே எரியும் வீட்டிற்குள் புகுந்தேன்" என்று கூறினான்.



சுயநலம் மிகுந்த இந்த உலகிலே பத்து வயது நிரம்பிய பாலகன் *அன்டொய்ன்* தனது கடமையை உணர்ந்து, தனது உயிரையும் பொருட்படுத்தாது, தங்கையின் உயிரைக் காப்பாற்றி வீர விவேகானந்தரின் சிங்கக்குட்டியானான்.



'மற்றவர்களின் நன்மைக்காகத் தன்னுடைய இதயத்தின் இரத்தத்தை சிந்திப் பாதை அமைப்பவர்கள்தான் பெரியோர்கள் ஆவார்கள்' என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். ஆகவே சிறுவர்களாகிய நாம் வீட்டில் எமது சகோதரர்களுக்கு நன்மை செய்யப் பழக வேண்டும். அத்துடன் அன்னை சாரதா தேவி கூறியதுபோல் உலகத்திலுள்ள அனைவரையும் எம்முடைய சகோதர சகோதரிகளாக எண்ணி அவர்களது துன்பங்களைப் போக்கி, இன்பம் அளிக்க முயற்சிப்பதோடு எம்மால் முடிந்த நன்மைகளைச் செய்து இறைவனின் குழந்தைகளாக வாழ்வோமாக!

-தமிழாக்கம்: கு. சனாதனி, தரம் 10-

# புதுவருடத் தீர்மானங்கள்

ஒவ்வொரு விடுமுறையிலும் நாம் ஏதாவது உயர்ந்த கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதென்று தீர்மானிப்பதுண்டு. எனினும் சில வேளைகளில் இக் கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்படாமல் இருக்கின்றன. ஏனெனில் உணர்வுபூர்வமான முரண்பாடுகள் எம்முள் ஏற்படுகின்றன. ஆனாலும் நாம் இயல்பாகவே இதைப் பற்றிக் கவலைப்படுகின்றோம்.

இதற்கு என்ன காரணம்? மனதிலே உறுதி இல்லை என்றே எந்த மனோதத்துவ நிபுணர்களும் கூறுவார்கள். தெளிவற்ற சிந்தனை முரண்பாடே காரணம் என்று சில நவீன தத்துவ ஞானிகள் கூறுவார்கள். இந்த முரண்பாட்டுக் கருத்துக்களை முறியடிக்காவிட்டால் எமது இலட்சியங்களை அடைய முடியாது.



எந்த வேலையானாலும் தடைகளைத் தாண்டி மனவுறுதியோடு முன்னேற வேண்டும். எமது தொழிலையோ நாம் செய்ய வேண்டிய செயற்பாடுகளையோ மாற்றுவதால் இந்த மனவுறுதி உண்டாகப்போவதில்லை. மாறாக, அக் காரியங்களைப் பொறுமையுடன் செய்வதே நற் பயனைக் கொடுக்கும். நாளாந்த வாழ்க்கையிலே எங்களுடைய இலட்சியத்தை நோக்கிய செயற்பாடுகள் தோல்வியடையும் சந்தர்ப்பங்கள் ஏற்படுமானால் அதைக் கண்டு பின்வாங்கக்கூடாது. தெளிவான சிந்தனையுடன், ஒருமைப்பட்ட மனத்துடன் செயற்பட்டால் எமக்குத் தேவையான மனக்கட்டுப்பாடு கிடைக்கும் என்பது உறுதி. அதேவேளை மனதில் ஏற்படும் கிளர்ச்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட தெளிவான மன இயல்பு ஏற்பட வேண்டுமானால் நாளாந்த வாழ்க்கையிலே தொடர்ச்சியான வழிபாடுகள், தியானம், மனக்கட்டுப்பாடு ஆகியவை மிக மிக முக்கியமாகும்.

இறைநாமத்தை உச்சரிப்பதாலோ அல்லது தியானத்தில் ஈடுபட்டாலோ அது மனதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் என்பது உறுதி. ஒரே தடவையில் இல்லாவிட்டாலும் சிறிது சிறிதாக இது நிகழும் என்பது அனுபவசாலிகளின் கூற்று. அனுபவம் வாய்ந்தவர்களால் கூறப்பட்ட ஆலோசனையின்படி இந்த தியானத்தையோ அல்லது பிரார்த்தனையையோ கட்டுப்பாட்டோடு செய்து வரும்போது மனதில் உள்ள உயர்ந்த இலட்சியங்களை அடையலாம். உதாரணத்திற்கு, சூரிய ஒளி பரந்த வெளியிலே



படர்கின்றபோது பெரிய தாக்கம் இருக்காது. ஆனால் அது குவிவுவில்லை மூலம் குறிப்பிட்ட ஓர் இடத்திற்குக் குவிக்கப்படும்போது அதனால் ஏற்படுகின்ற வெப்பம் நெருப்பாக மாறலாம். அதேபோல் கட்டுப்பாடு இல்லாத மனதில் ஏற்படும் எண்ணங்கள் சிதறிப்போகும் நிலையால் இயல்பாகவே கட்டுப்பாடில்லாத செயல் உண்டாகிறது. ஆயினும் சிறிது சிறிதாக மனதை ஒருமைப்படுத்தும் போது அதனால் ஏற்படும் செய்றபாட்டால் மனதிலே இயல்பாகவே ஒரு உந்து சக்தி ஏற்படுகிறது. இயற்கையாகவே எங்களுக்கு மன உறுதி இல்லை என்று கூறுவது தவறு. சாதாரணமான ஆசைகளால் புலன் கட்டுப்பாடின்றி அளவற்ற



சிந்தனைகள் ஏற்படுவதால்தான் மனம் தெளிவில்லாமல் இருக்கிறது. தொடர்ச்சியாக தியானம், வழிபாடுகளில் ஈடுபட்டால் மனக்கட்டுப்பாடு சாத்தியமாகிறது. இந்த நிலையில் மனதிலுள்ள இலட்சியங்களை அடைய முடிகிறது.

இது ஆன்மீகவாதிகளுக்கு மாத்திரம் பொருத்தமானது என்று நினைப்பது தவறு. எத்தொழிலைச் செய்பவராக இருந்தாலும் தனது உயர்ந்த இலட்சியங்களைக் கருத்தோடு எண்ணி, கட்டுப்பாட்டுடன் மனதை ஒருமுகப்படுத்தி நடைமுறை வாழ்க்கையில் செயறபடுவோருக்கு வெற்றி நிச்சயம்.

மூலம்: ஸ்ரீமத் சுவாமி அகிலானந்தஜீ
மஹராஜூடனான நேர்காணல்.
வேதாந்த கேசரி.

-ஆக்கம்: இ. பார்த்தீபன்-

## கன்னியாகுமரியில் சுவாமி விவேகானந்தர்

"நீ நாட வேண்டியது உன்னுடைய முக்தியை அல்ல; உலகிற்கே நிழல் தருகின்ற ஆலமரமாக விளங்க வேண்டியவன் நீ" என்று குருதேவர் ஒருமுறை நரேந்திரனிடம் (சுவாமி விவேகானந்தர் - சுவாமிஜி) கூறினார். மனிதகுலத்தின் அதிஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும், சுவாமிஜி இமயமலைமீது தமக்குள்ள ஈடுபாட்டை விட்டு, பார்வையை மக்கள்மீது செலுத்தினார்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் மறைவிற்குச் சில காலத்தின் பின் சுவாமிஜி பரிவிராஜ வாழ்க்கை மேற்கொண்டார். பரிவிராஜ வாழ்க்கை என்பது, ஒரு துறவி எந்த இடத்திலும் மூன்று நாட்களுக்குமேல் தங்காமல் தேச சஞ்சாரம் செய்து வாழும் வாழ்க்கை ஆகும். அதிக நாட்கள் தங்கினால் அந்த இடம், அங்குள்ள மக்கள் மீது பற்று ஏற்பட்டுவிடும் என்பதாலேயே இப்படியொரு ஏற்பாடு. சுவாமிஜி தன் பரிவிராஜ வாழ்க்கைப் பயணத்தில், சகோதரத் துறவிகளோ வேறு யாருமோ தம்முடன் வரக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். கைத்தடி ஒன்றும் கமண்டலம் ஒன்றும் ஓரிரு நூல்களும் தவிர வேறு எதுவும் இன்றி இறையருள் ஒன்றையே சார்ந்து புறப்பட்டார். அவர் எங்கிருக்கிறார் என்ற விடயம் யாருக்குமே தெரியாமல் இருந்தது. யாரும் தன்னைக் கண்டுபிடிக்கக் கூடாது என்பதற்காகத் தன் பெயரையும் அடிக்கடி மாற்றிக்கொண்டார். இந்தியா முழுதும் அவரது பயணம் சுமார் இரண்டரை வருடங்கள் நீடித்து இறுதியில் தென்கோடியான குமரி முனையில் நிறைவுற்றது. இந்தப் பரிவிராஜ வாழ்க்கையில் தாமும் பல விடயங்களைக் கற்றுக்கொண்டதோடு பல விடயங்களைப் பலருக்குப் பல வழிகளில் கற்றும் கொடுத்தார்.



பரிவிராஜக் கோலத்தில்...

‘முதலில் அனுபவங்களைப் பெறு; பிறகு சிந்தனைசெய்; பிறகு செயல்படு’ என்கின்றன சாஸ்த்திரங்கள். சுவாமிஜி தனது நாட்டைப் பற்றிய அனுபவங்களைப் பெற்றுவிட்டார், இனி சிந்திக்க வேண்டும். அதற்கு, நீலத்திரைக் கடல் எழுந்து ஆர்ப்பரித்தாலும், நிலவிடும் அமைதி குலையாமல், நின்றபடியே தவம் செய்யும் கன்னித்தேவி எழுந்தருளும் பாரதக்கண்டத்தின் தென்கோடியை அடைந்தார். அங்கு வீற்றிருக்கும் குமரி அம்மனை வழிபட்டு, பின்னர் கடற்கரைக்குச் சென்றபோது அவரது மனம் அன்று அசாதாரணமானதோர் அமைதியில் ஆழ்ந்தது.

ஆழ்ந்து சிந்திக்க விரும்பிய சுவாமிஜி, கன்னியாகுமரி தேவியை வழிபட்டு, வழிகாட்டுமாறு மனமார வேண்டினார். சுவாமிஜியின் கண்களில் பட்டன, கடலுக்குள் 2கி.மீ. தொலைவில் அமைந்திருந்த பாறைகள். அங்கே சென்று தனிமையில் அமர்ந்து ஆழ்ந்து தியானித்து, தேவியின் அருளால் வழிகாண விரும்பியது அவரது உள்ளம். அங்கே தம்மைக் கட்டுமரத்தில் அழைத்துச் செல்லுமாறு மீனவர்களிடம் கேட்டுக்கொண்டார். அவர்கள் பணம் கேட்டனர். சுவாமிஜியிடமோ பணமில்லை. மீனவர்கள் மறுத்துவிட்டார்கள். நீந்திச் செல்வதைத்தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை. வேறு எதையும் பொருட்படுத்தாமல் துணிந்து கடலில் குதித்து, அந்தப்பாறையை நோக்கி நீந்தினார் சுவாமிஜி. சுவாமிஜி கன்னியாகுமரிக்கு வந்தபோது அவரது தோற்றத்தால் கவரப்பட்ட ‘சதாசிவம்பிள்ளை’ என்பவர் அவர் நீந்திச்செல்வதைக் கண்டு ஆர்வமும் குழப்பமும் மேலிட அவரைப் படகில் பின்தொடர்ந்தார். இதைக் கண்ட சுவாமிஜி அவர்களைத் திரும்பிச்செல்லுமாறும் தம்மைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.



சுவாமிஜி அமர்ந்தார். சுற்றிலும் அரபிக்கடல், வங்காள விரிகுடா, இந்து மகா சமுத்திரம் ஆகிய மூன்றும் சங்கமிக்கும் கடல். அவருக்கு முன்னால் விரிந்திருந்தது பாரதத் திருநாடு. இந்திய வரலாற்றை மட்டுமல்ல உலக நாடுகளின் வரலாற்றையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்த அவர், பாரதத் திருநாட்டைத் தியானித்தார்.

'தத்துவச் சிந்தனையின் உன்னதங்களைக் கண்ட முனிவர்களைத் தந்த அந்தப் பாரதம் எங்கே? அந்நிய நாடுகள் பலவற்றுடன் வாணிப உறவு கொண்டு, அவர்களைக் கடல் கடந்து தன்னை நாடி வரச் செய்த பாரதம் எங்கே?' என்று சுவாமிஜியின் சிந்தனையில் சுழன்றது, பழங்கால இந்தியப் பெருமைகள். சுழற்சியின் மறுபுறத்தில் தோன்றியது நிகழ்கால இந்தியா. எல்லா இடங்களிலும் கூட்டங்கூட்டமாய் நெருங்கி அமைந்துள்ள குடிசைகள், கந்தல் துணிகளோடு நடமாடும் இளையவர்களும் முதியவர்களும். இதுதான் இன்றைய இந்தியா. ஏன் இந்த நிலை மாற்றம்? இந்த நிலையை எவ்வாறு மாற்றலாம் என்றெல்லாம் சுவாமிஜியின் சிந்தனை சுழன்றது.

இதுவரை எந்த இறைவன் தன்னைக்காத்துவந்துள்ளாரோ, அவர் இதற்கும் வழிகாட்டுவார் என்று தெளிந்தார் சுவாமிஜி. சுவாமிஜியின் தியானம் நிறைவுற்றது. இதற்குள் மூன்று நாட்கள் கழிந்திருந்தன. இது நிகழ்ந்தது 1892 டிசம்பர் 24ஆம் திகதி முதல் 26ஆம் திகதியாக இருக்கலாம். நான்காம் நாள் ஒரு கட்டுமரத்தில் சுவாமிஜியைக் கரைக்கு அழைத்து வந்தார்கள். இதற்குள் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டுப் பலர் அவரைக் காண அங்கே வந்திருந்தார்கள். தம்மைப்பற்றிக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சுவாமிஜி கூறிய ஒரே பதில்: 'ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடன் நான். அவரைப்பற்றி உலகம் விரைவில் அறிய உள்ளது' என்றார். 'சுவாமிஜி, பாறையில் நீங்கள் என்ன செய்தீர்கள்? என்ன அனுபவம் கிடைத்தது?' என்று கேட்டார்கள். அதற்கு சுவாமிஜி கூறினார்:

**'அகத்தளவிலும் புறத்தளவிலும் நான் எதைத் தேடி இத்தனை காலம் அலைந்தேனோ அது இந்த இடத்தில் எனக்குக் கிடைத்தது.'**



இங்கிருந்து தான் சுவாமிஜியின் சாதனைப்பயணம் தொடங்கியது. சுவாமிஜி அன்று தியானம் செய்த இடத்தில் இன்று ஓர் நினைவு மண்டபம் உள்ளது. அதை நீங்கள் முன் அட்டையில் காணலாம். ★★★

## எஜமானனைப்போல் இரு



பேச்சாளர்: கலைமாமணி
சு. கி. சிவம்
மூலம்: இணையம்

ஒருவன் எத்தனைபேரை ஏய்க்கிறான் அல்லது எத்தனை பேருக்குத் தலைவனாக இருக்கிறான் என்பது முக்கியமல்ல. தனக்குத் தானே அவன் தலைவனாக உள்ளானா? என்பதே இன்று எம்முடைய கேள்வி.

சரி, மேற்சொன்னவாறு "தனக்குத் தானே தலைவன்" ஆக இருப்பது என்றால் என்ன? "தலைவன்" என்பது பிறரை மிரட்டுவதும் மிடுக்காய்த் திரிவதும் மட்டுமல்ல. தானே செய்து முடிக்க வேண்டும், எடுத்த காரியம் நிறைவேற வேண்டும் என்ற பொறுப்புணர்வே தலைமையின் இலக்கணம்.

தலைவனுக்கு இருக்க வேண்டிய சில குணாதிசயங்களை சுவாமி விவேகானந்தர் விபரிக்கிறார் பாருங்களேன்:

1. எல்லாப் பொறுப்புக்களையும் தன் தோள் மீதே சுமப்பான்.
2. மக்களுக்கு எவை உண்மையாக நன்மை பயக்குமோ, அக் காரியங்களையே முன்னின்று செய்வான். தன் சௌகரியங்களுக்கு ஏற்றதானவற்றை மட்டும் செய்து மக்களிடம் திணிக்க மாட்டான்.
3. மனதளவில் சுதந்திரனாக இருப்பான். யாரோ சொன்னார்கள் என்பதற்காக எந்தக் காரியத்திலும் ஈடுபடாமல், விருப்புணர்வுடன், உள்ளுணர்வுடன் ஈடுபடுவான்.
4. இலட்சியத்தோடு இருப்பான். மனம் போன போக்கில் போகாமல் குறிக்கோள் உடையவனாக, திட்டமிட்டுச் செயற்படுபவனாக, தடைகளைப் படிக்கற்களாகக் கொள்ளும் வல்லமையுடையவனாக இருப்பான்.
5. தவறுகளைக் கண்டு துவண்டுவிடமாட்டான்.

இதுவரை தலைவனைப்பற்றி அக்கு வேறு ஆணி வேறாகப் பார்த்தோம். சற்றே நம்மைப்பற்றியும் பார்ப்போமே.

தந்தையார் சொன்னார் என்பதற்காகப் படிக்கிறோம்; தாயார் திட்டுவார் என்பதற்காக உண்கிறோம்; வெறுமனே அடிமையைப் போல் ஏனோ தானோ என்று யார்யாருக்காகவோ வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

எனவேதான் சுவாமி விவேகானந்தர் இவ்வாறு கூறுகிறார்:



1. படிக்கும்போது எஜமானனைப்போல் படி. உள்ளுணர்வுடனும் விருப்புணர்வுடனும் நமக்காக நாம் படிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் திறமை வளர்கிறது; பலருக்குப் பயன்தருபவராக நாம் மாறுவோம்; எல்லாவற்றுக்கும் மேலாக நமக்கும் பூரண திருப்தி கிடைக்கின்றது.
2. எஜமானனைப்போல் தலைமை தாங்கு. எடுத்த காரியம் நன்மை பயக்குமொன்றெனில் உயிரைத் தந்தாவது அதை நிறைவு செய்கின்ற வைராக்கியத்தோடு வழிகாட்டவேண்டும்.
3. எஜமானனைப்போல் சேவை செய். எதைச் செய்தாலும், மேற்சொன்ன குணாதிசயங்களிலிருந்து விலகாது, பரந்து விரிந்த சேவை மனப்பான்மையையும் வளர்த்துக்கொள்.

ஒருமுறை டயோஜினஸ் எனும் தத்துவஞானியைக் கொள்ளையர் சிறைப்பிடித்து அடிமையாக விற்க முயன்றனர். சந்தையில் நின்ற டயோஜினஸ், "நான் அடிமையல்ல; எஜமானன். யாருக்கு எஜமானன் வேண்டுமோ, அவர்கள் என்னை வாங்கலாம்" என்று கூறினாராம்! அறிவுடையோரும் விழிப்படைந்தோரும் தாம் அடிமைகளல்ல, எஜமானர்கள் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சரி, நாம் என்ன செய்ய வேண்டும்? வழிதவறிச் சென்றுவிடாதிருக்க, சுவாமிஜியின் கூற்றுப்படி நம்மை நாமே எஜமானர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

# அந்தணன் வாங்கிய ஆடு

அந்த ஊரில் மித்ரசர்மா என்ற ஓர் அந்தணன் இருந்தான். அவன் யாகம் ஒன்று செய்யத் தீர்மானித்தான். அந்த வேள்விக்கென ஒரு வெள்ளாடு வாங்கிவரும் பொருட்டு பக்கத்து ஊருக்குப் புறப்பட்டான். அங்கிருந்த குடியானவனை அணுகித் தான் வந்த காரியத்தை விளக்கினான். இவன் நற்காரியத்திற்கே கேட்கிறான் என்பதால் இல்லை என்று சொல்லாது ஒரு



கொழுத்த வெள்ளாட்டைக் கொடுத்தான் குடியானவன். அதை அழைத்துக் கொண்டு வருகையில், அந்த ஆடு அங்கும் இங்குமாக ஓடத் தொடங்கியது. இதனால் மிகவும் அவதிப் பட்டுப்போன மித்ரசர்மா அந்த ஆட்டைப் பிடித்துத் தன் தோள் மீது போட்டுக் கொண்டு நடந்தான்.

அதை மூன்று போக்கிரிகள் தூரத்திலிருந்தே பார்த்துவிட்டார்கள். பசியாலும், குளிராலும் வருந்திக் கொண்டிருந்த அவர்கள், எப்படியாவது அந்தக் கொழுத்த ஆட்டை அந்தப் பிராமணனிடமிருந்து அபகரித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தனர். உடனே அம் மூவரும் கூடிப்பேசி ஒரு திட்டம் வகுத்தனர். அதைச் செயல்படுத்தத் தனித்தனியே பிரிந்து போயினர்.

அவர்களில் ஒருவன் விவசாயி வேடத்தில் மித்ரசர்மாவின் அருகில் வந்தான். "நித்தியமும் தவறாமல் அக்கினி வளர்க்கும் அந்தணரே! நீர் சீலனாயிருந்தும் இப்படி இழிவான காரியம் செய்யலாமா?" என்றான். "என்ன! இழிவான காரியமா?" என்று சர்மா திகைத்தான். "அழுக்குப் பிடித்த நாய் ஒன்றை உமது தோள் மீது சுமந்து செல்கிறீரே. இது முறையா? இதைப்

பார்த்தால் வழியில் வருவோரெல்லாம் உம்மைப் பரிகாசம் செய்ய மாட்டார்களா? அதுகூட உமக்குத் தெரியவில்லையே!'' என்று ஏளனமாகவும் மிடுக்காகவும் கேட்டான். அது கேட்ட மித்ரசர்மாவுக்குக் கடும் கோபம் வந்தது. "யார் ஐயா நீ! உனக்குக் கண் அவிந்து போய் விட்டதா? நான் சுமந்து செல்லும் ஆட்டைப் பார்த்து நாய் என்கிறாயே! நல்ல வேடிக்கை!'' என்றான். "ஐயா கோபித்துக் கொள்ளாதே! உண்மையைத்தான் சொன்னேன். நீர் நாயைச் சுமந்து செல்ல விரும்பினால், தாராளமாகச் சுமந்து செல்லும். எனக்கேன் வம்பு!'' என்று சொல்லிக்கொண்டே அவன் சென்று விட்டான்.

மித்ரசர்மா சற்றுத் தூரம் தான் சென்றிருப்பான். இரண்டாவது போக்கிரி குறுக்கிட்டான். அவன் ஒரு கூலிக்காரன் வேடத்தில் வந்து சர்மாவைச் சந்தித்தான். "ஐயா! நீர் பிராமணன் தானே! ஓர் செத்துப் போன கன்றுக்குட்டியை இப்படித் தோள்மீது சுமந்து செல்கிறீரே! உமக்கு வெட்கமாயில்லை? அந்தக் கன்றுக் குட்டியின்மீது என்னதான் உமக்குப் பிரியம் இருந்தாலும் இப்படிச் செத்துப் போனதைச் சுமந்து செல்லலாமா? செத்த மிருகங்களைத் தொடுவது தீட்டாயிற்றே! அதுகூடவா உமக்குத் தெரியாது?'' என்று மிகவும் ஏளனமாகப் பேசிச் சென்றான். அது கேட்ட மித்ரசர்மாவுக்கு அளவற்ற கோபம் வந்துவிட்டது. "உனக்குக் கண் தெரியாதா? நான் உயிருள்ள ஆட்டைத்தான் தோளில் சுமந்து செல்கிறேன். அதைப்போய்ச் செத்துப்போன கன்றுக்குட்டி என்கிறாயே'' என்று கத்தினான்.



"நான் பார்ப்பதைத்தான் சொல்கிறேன். அதற்காக இப்படிக் கோபித்துக் கத்துவதா?" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான் அவன். மித்ரசர்மா இப்படிக் கோபமாகப் பேசிவிட்டானேயொழிய அவன் மனதில், "என்ன இப்படி ஏதேதோ சொல்கிறார்களே!" என்று ஒருவித தயக்கம் ஏற்படவே செய்தது.

மேலும் சற்றுத்தூரம் சென்றதும் மூன்றாவது போக்கிரி வந்தான். அவன் ஆட்டிடையன் போல் தோற்றமளித்தான். "ஐயா அந்தணரே! ஏன் கழுதையை இப்படித் தோளில் சுமந்து செல்கிறீர்கள்? யாராவது பார்ப்பதற்குள் அந்தக் கழுதையை இறக்கி விட்டுவிட்டு வேலையைப் பார்த்துப் போமையா. எனக்கே வெட்கமாக இருக்கிறது" என்று அருவருப்பாகவும், ஏளனமாகவும் பேசினான் அவன்.

அதுகேட்ட மித்ரசர்மா அப்படியே திகைத்துப் போனான். "என்ன இது! ஒருவன் நாய் என்றான். மற்றொருவன் செத்த கன்றுக்குட்டி என்றான். இவனோ கழுதை என்கிறானே! அதனால் இது பல்வேறு உருவம் எடுக்கும் அரக்கனாக இருக்குமோ? நான் ஆடு என்று நினைத்து சுமந்து செல்கிறேனே!" என எண்ணினான். உடனே தோளிலிருந்த ஆட்டைத் தொப்பெனக் கீழே போட்டான். அவ்வளவுதான்! திரும்பிப் பார்க்காமல் ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான். அந்தணன் பார்வையிலிருந்து மறைந்ததும் மூன்று போக்கிரிகளும் கூடி, அந்த ஆட்டைப் பிடித்துக் கொண்டு சென்றனர்.



மற்றவர்கள் தமது சுயநலத்திற்காகப் பலவாறாகக் கூறுவர். நாம் அதை ஆராயாமல் முடிவெடுக்கக் கூடாது.




சாஸ்திரங்கள் சொல்கின்றன என்பதாலோ இன்னொருவன் 'உண்மை' என்று சொல்வதாலோ சம்பிரதாயங்களால் புனிதமாக்கப்பட்டு விட்டது என்பதாலோ வார்த்தைகளை நம்பிவிடாதீர்கள். உண்மையை நீங்களே கண்டுபிடியுங்கள். அதற்கான காரணத்தையும் கண்டுபிடியுங்கள். அதுவே 'மெய்யாக உணர்தல்' ஆகும்.

---

*(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

"நான் சற்று நேரத்திற்கு முன் ஒரு கனவு கண்டேன். அதில் இங்கு காணிக்கையாக வந்த எல்லாப் பொருட்களையும் பெரிய தராசு ஒன்றின் ஒரு தட்டில் வைத்தனர். இன்னொரு தட்டில் நான்கு பேரீச்சம் பழங்களை வைத்தனர். பேரீச்சம் பழங்கள் இருந்த தட்டே தாழ்ந்து கிடந்தது. எதிர்த் தட்டில் மேலும் மேலும் பொருட்களை வைத்தும் அத் தட்டு சிறிதும் உயரவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? அன்புடன் தரப்படும் காணிக்கைப் பொருட்கள் சிறிதாயினும் விலை உயர்ந்த பொருட்களைவிட மதிப்பில் உயர்ந்தவை. நாம் பொருளைப் பார்க்கக் கூடாது; தந்தவரது உள்ளத்தைப் பார்க்க வேண்டும்'' என்றார். தங்கள் செயலுக்கு வருந்திய அவர்கள் நபிகள் நாயகத்திடம் மன்னிப்பு வேண்டினர்.



இக் கதையைக் கேட்ட ஜலாலின் சீடர்களும் தம் தவறை உணர்ந்தனர். அந்த ஏழை விவசாயிகள் தந்த கூழ் எத்துணை மதிப்புடையது என்பதை விளங்கிக்கொண்டனர்.

-ஆக்கம்: ஜெ. அஜந்தி, உ. கீர்த்திகா - தரம் 12-

# தோப்புக்கரணம்



'ஓம்' எனும் பிரணவ வடிவினர் விநாயகப் பெருமான். அவரே எல்லா மந்திரங்களுக்கும் மூல பிரணவ மந்திரமாக விளங்குபவர். "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்"

எந்தக் கருமமும் இடையூறின்றி இனிதே நிறைவேறுதற் பொருட்டு வேழ முகத்து விநாயகரின் அருளை வேண்டி வணங்குதல் தொன்றுதொட்டு வரும் வழக்கமாகும். விநாயகரை வழிபடும் முறைகளிலே தோப்புக்கரணம் போடுதல் முக்கியமான அம்சமாகும். இது இந்து மக்களால் பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் வழிபாட்டு முறையாகும். தோப்புக்கரணம் போட்டு விநாயகரை வழிபடும் வழக்கம் வருவதற்குப் புராணங்களிலே இரண்டு கதைகள் கூறப்படுகின்றன.

ஒருமுறை சகல ஆற்றல்களும் பெற்ற கஜமுகாசுரன், தேவர்கள் அனைவரும் தன் முன் தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போடவேண்டும் என்று கட்டளையிட்டான். தேவர்கள் மீது கருணைகொண்ட விநாயகர், கஜமுகாசுரனை அடக்கியதால் தேவர்கள் விநாயகருக்கு நன்றி செலுத்துவதற்காய் தோப்புக்கரணமிட்டு வணங்கினர்.

தோப்புக்கரணம் பற்றி மற்றொரு கதையும் உண்டு. ஒரு சமயம் மகாவிஷ்ணுவுடைய சக்கரத்தை அவருடைய மருமகனான பிள்ளையார் விளையாட்டாகப் பிடுங்கி வாயில் போட்டுக் கொண்டுவிட்டார். பிள்ளையாரிடமிருந்து அதைப் பெறுவது மிகக் கடினம். மகாவிஷ்ணுவுக்கு ஒரு யோசனை தோன்றியது. விநாயகரைச் சிரிக்க வைத்து சக்கரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணித் தனது நான்கு கரங்களையும் காதுகளில் பிடித்து நடனமாடினாராம். இதைப் பார்த்த விநாயகர் சிரித்துக்கொண்டே தனது வாயிலிருந்து சக்கரத்தைக் கீழே விழுத்திவிட்டார். இவை தோப்புக்கரணம் பற்றி எமது புராணங்களில் உள்ள கதைகளாகும்.

'டோர்பித்' என்றால் கைகளினால் என்றும், கரணம் என்றால் காது என்றும் பொருள்படும். இதுவே மருவி 'தோப்புக் கரணம்' ஆகியது எனக் கூறப்படுகிறது. தோப்புக்கரணம் போடும் வழக்கம் தற்காலத்தில் எம்மவரிடையே அரிதாகிக்கொண்டு வருகிறது. ஆனால் இந்தத் தோப்புக்கரணம் அமெரிக்காவில் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆச்சரியமான விடயம்தான். லொஸ் ஏஞ்சல்ஸைச் சேர்ந்த வைத்தியர் எரிக் றொபின்ஸ், இந்த எளிய உடற் பயிற்சியால் மூளையின் செல்களும் நியூரோன்களும் சக்தி பெறுகிறது என்கிறார். தன்னிடம் வரும் 'மறதி' நோயாளர்களுக்கு (memory loss patients) இவ் உடற்பயிற்சியைச் செய்யும்படி சிபாரிசு செய்கிறார்.


வைத்தியர் எரிக் ரொபின்ஸ்

'யேல்' பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரான வைத்திய கலாநிதி யூஜினியஸ் யங் என்பவர், தோப்புக்கரணம் போடும்போது காதுகளைப் பிடித்துக் கொள்வது, மிக முக்கிய அக்குபஞ்சர் புள்ளிகளைத் தூண்டி விடுகின்றது என்று குறிப்பிடுகின்றார். இதனால் மூளையின் நரம்பு மண்டலத்தில் சக்திவாய்ந்த மாற்றங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கிறார். அத்துடன் இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து எழுகையில் மூளையின் இரு பகுதிகளும் பலன் பெறுவதாகக் கூறுகிறார். அத்துடன் அவர், தோப்புக்கரணம் போடுவதால் ஏற்படும் மாற்றங்களை மதிப்பிட்டுக் காட்டியுள்ளார். மூளையில் நியூரோன்களின் செயற்பாடுகள் அதிகரிப்பதை பரிசோதனை மூலம் நிரூபித்தார். இதனால் நரம்பு மண்டலத்தினூடாக மிக நுண்ணிய தகவல்களை அனுப்பும் செயற்பாடு விருத்தியடைகின்றது.

மதி இறுக்கம் - மருட்சி (Autism), மறதி - மாறாட்டம் (Alzheimer) ஆகிய நோய்களுக்கு தோப்புக்கரணத்தை வைத்தியர்கள் பரிந்துரைக்கின்றனர்.

'ப்ராணிக்' சிகிச்சை நிபுணரான கோசோக்சூயி தன்னுடைய 'Super Brain Yoga' (அதிசிறந்த மூளைக்குரிய யோகப் பயிற்சி) என்னும் புத்தகத்தில் தோப்புக்கரணத்தைப் பற்றியும் அதன் பலன்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இப் பயிற்சியைத் தினந்தோறும் குறைந்தது மூன்று நிமிடங்கள் செய்தால் வியக்கத்தக்க அறிவு சார்ந்த மாற்றத்தைக் காணலாம்.


வைத்தியசாலையில் தோப்புக்கரணம்

*தோப்புக்கரணம் போடும் முறை:* கால்களைத் தோள்களின் அகலத்திற்கு அகட்டி, பாதங்களை நேராக வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் வலது கையால் இடது காதையும் பின் இடது கையால் வலது காதையும் பிடித்துக் கொள்ள வேண்டும். இதன்போது பெருவிரல் காதின் முன்புறம் இருக்க வேண்டும். பின் மூச்சை நன்றாக வெளியே விட்டவாறு உட்கார்ந்தும், மூச்சை நன்றாக உள்ளிழுத்தவாறு எழுந்தும் தோப்புக்கரணம் போட வேண்டும்.

முன்னைய காலங்களில் பாடசாலைகளில் யாராவது பிள்ளைகள் குழப்படி செய்தால், அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் அவர்களுக்குத் தண்டனையாகத் தோப்புக்கரணம் போடச் சொல்வதுண்டு. ஏனென்றால் தோப்புக்கரணம் போட்டால் சோர்வான பிள்ளைகளுக்கு உற்சாகம் பிறப்பதோடு குறும்பு செய்யும் பிள்ளைகளுடைய மனமும் சாந்தம் அடையும். எமது சமயத்திலுள்ள சடங்குகளும் சம்பிரதாயங்களும் மிகப் பெரும் விஞ்ஞானத் தத்துவங்களை உள்ளடக்கியவை. ஆனால் இந்துக்களாகிய நாம் எதையும் சமயத்தோடு தொடர்புபடுத்தினால்தான் பயபக்தியுடன் தொடர்ந்து செய்வோம் என்பதால் இத்தகைய பல அருமையான பழக்கவழக்கங்கள் எமது சமயங்களில் புராணக் கதைகளூடாகப் புகுத்தப்பட்டுள்ளன. நாம் வெறுமனே மூட நம்பிக்கையாக அவற்றைக் கடைப்பிடிக்காமல் பலனறிந்து செய்து சிறந்த பயனைப் பெறுவோம்.

## சர்வதேசத்தில் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள்

*(கடந்த இதழின் தொடர்ச்சி...)*



உடுப்பி, பேலூர்மடம், இராமகிருஷ்ண ஆசிரமத்தின் ஒரு பிரம்மாண்டத் திட்டமாக 100அடி உயர ஒற்றைக் கல்லில் சுவாமி விவேகானந்தரின் திருவுருவச்சிலை உருவாக்கப்பட உள்ளது. 2500 தொன் எடை கொண்ட இந்தச் சிலை உலகிலுள்ள மிகப்பெரிய ஒற்றைக்கல் சிலைகளிலேயே ஒன்றாக அமையும். சுவாமிஜியின் கம்பீரத் தோற்றமுடைய இச்சிலை உறங்கிக் கிடக்கும் எல்லா ஆன்மாக்களையும் விழிப்புறச் செய்யும் வகையில் அமையவுள்ளது. 2011ஆம் ஆண்டு இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் 2015ஆம் ஆண்டு ஆரம்பத்தில் முழுமை பெறும்.

"அமைதிக்கும் நல்லிணக்கத்திற்குமான உலகளாவிய ஒரு சந்திப்பு" எனும் தலைப்பில் 2012 செப்டெம்பர் மாதம் 11, 12ஆம் திகதிகளில் புதுடில்லி இராமகிருஷ்ண மடம் ஒரு நிகழ்ச்சியை நடாத்தியது. இதில் சர்வமதப் பிரதிநிதிகள் உரையாற்றினர். 1893ஆம் ஆண்டு இதே செப்டம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா - சிகாகோவில் நடைபெற்ற சர்வமத மகாசபையிலேதான் சுவாமி விவேகானந்தர் உரையாற்றி உலகப் பிரசித்தியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




சுவாமி விவோகானந்தரின் முழு உருவ வெண்கலச்சிலை திறப்பு விழாவும் ஸ்ரீஇராமகிருஷ்ண-விவேகானந்த நடமாடும் இலவசக் கண்காட்சி ஊர்தி தொடக்கவிழாவும் 2012 டிசம்பர் மாதம் நாட்டறம்பள்ளி இராமகிருஷ்ண திருமடத்தில் நடைபெற்றது.

-தொகுப்பு: பா. ஜெனனி-


## செய்திகள்

20.01.2013 அன்று எமது சமயபாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா இடம் பெற்றது. அன்றையதினம் சமயஅறிவு, வேதபாடம், சங்கீதம், மனனம், பேச்சு, யோகாசனம் போன்ற பாடங்களில் தமது திறமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்திய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் இந்து சுயம் சேவக சங்கத்தின் பிரசாரகர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இந் நிகழ்வின்போது அறநெறி அமுதத்தின் 13ஆவது அமுதத்தின் 1ஆவது துளி பிரதமவிருந்தினர் அவர்களால் வெளியிடப்பட்டது.




வீர நரேந்திரன் சுவாமி விவேகானந்தரின் ஜெயந்திதினம் 03.02.2013 அன்று எமது ஆசிரமத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காலையிலிருந்து மதியம் வரை பஜனை, சொற்பொழிவு, ஹோமம் என்பன இடம்பெற்றன. 17.02.2013 அன்று எமது சமயபாடசாலை மாணவர்களால் பஜனை, நாடகம், நடனம், உரையாடல் போன்ற கலை நிகழ்வுகளுடன் சுவாமிஜியின் பிறந்ததினம் கொண்டாடப்பட்டது.

10.2.2013 அன்று இலங்கை இந்து சுயம் சேவக சங்கத்தினால் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த ஆண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை இந்து எழுச்சி விழாவில் எமது மடத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி மஹராஜ், ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி மஹராஜ் ஆகியோருடன் எமது சமய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், தொண்டர்களும் கலந்து கொண்டனர். இதன் போது எமது சமயபாடசாலை மாணவர்களால் பஜனைப் பாடல்கள் இசைக்கப்பட்டன. அத்துடன் தொண்டர்களின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன.



10.3.2013 அன்று எமது ஆசிரமத்தில் மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. நான்கு யாமப் பூஜை, பஜனை, ஆகியவற்றைத் தொடர்ந்து ஹோமம் இடம்பெற்றது. சிவனடியார்கள் இரவு முழுவதும் விழித்திருந்து சிவராத்திரி விரதத்தைஅனுஷ்டித்தனர்.





கலியுகக் கற்பகதருவாம் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 178ஆவது ஜெயந்தி தினம் 13.3.2013 அன்று எமது ஆசிரமத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் காலையிலிருந்து பஜனை, விஷ்ணு சகஸ்ரநாமம், அமுதமொழிகள் வாசிப்பு, ஹோமம் என்பவற்றோடு மாலையில் சிறப்பு பஜனை, சொற்பொழிவு என்பனவும் இடம்பெற்றன.

24.03.2013 அன்று எமது சமய பாடசாலை மாணவர்களால் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்தைத் தாங்கி அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு மங்கள வாத்தியங்களின் முழக்கத்தோடும், குருதேவரின் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளோடும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. மேலும் அன்றைய தினம் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் மதங்களைச் சேர்ந்த மாணவ மாணவியரின் கலாசார நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன.




குருதேவரின் நேரடிச் சீடர்களான சுவாமி சிவானந்தர், சுவாமி சாரதானந்தர், சுவாமி திரிகுணாதீதானந்தர், சுவாமி அற்புதானந்தர், சுவாமி யோகானந்தர் ஆகியோரது ஜெயந்தி தினங்கள் முறையே 8.1.2013, 17.1.2013, 26.1.2013, 12.2.2013, 14.2.2013 ஆகிய தினங்களில் அனுஷ்டிக்கப்பட்டன.

நாம சங்கீர்த்தனத்தின் மகிமையை மக்களுக்கு உணர்த்திய சைதன்ய மகாபிரபுவின் ஜெயந்திதினம் 26.3.2013 அன்று ஆசிரமத்தில் கொண்டாடப்பட்டது.



- ஆக்கம்: வ. வானதி -

# குறுக்கெழுத்துப் போட்டி




விடைகள் அடுத்த இதழில்...

## இடமிருந்து வலம்

1. பலமே வாழ்வு ____________ மரணம்
3. 27 நட்சத்திரங்களில் இறுதி நட்சத்திரம் (குழம்பி)
5. கர்நாடக இசையில் அடிப்படையான ஏழு
7. இறைவனிடம் தவமிருந்து பெறுவது
9. இறைவன் ________ அந்தம் இல்லாதவர் (வலமிருந்து இடம்)
10. இராமகிருஷ்ணரின் தாயார் (வலமிருந்து இடம்)
12. தெற்குத் திசையின் அதிபதி (குழம்பி)

## மேலிருந்து கீழ்

1. தட்சிணேஸ்வரத்தில் உறையும் தேவி
2. சுவாமி விவேகானந்தருக்கு முதன் முதலாக வைக்கப்பட்ட இளமைப் பெயர்
4. அட்டாங்க யோகத்தில் ஒன்று (குழம்பி)
6. தேவர்களின் அதிபதி ________ன் (தலைகீழ்)
8. சர்வம் சிவ ________ (குழம்பி)
11. சில சமயங்களில் விதியை இதனால் வெல்லலாம் (தலைகீழ்)



## உங்கள் சிந்தனைக்கு...

இந்தியாவில் ஆங்கிலேயர் வருகைக்கு முன் அதன் தலைநகரான டில்லியை சத்திரபதி சிவாஜி எனும் மராட்டிய மன்னர் ஆண்டு வந்தார். ஒரு நாள் சிவாஜி தனது சேனாதிபதியின் வருகைக்காகத் தன் கூடாரத்தில் காத்திருந்தார்.

அப்போது பஹ்லோல் கான் எனும் முகமதிய சேனாதிபதியின் படையை எதிர்த்துப் போரிடச் சென்றிருந்த சேனாதிபதி கையில் ஒரு திருக்குரானுடன் வந்தார். அவர் பின்னால் ஒரு பல்லக்கை சிப்பாய்கள் தூக்கி வந்தார்கள். சேனாதிபதி சிவாஜியைப் பார்த்து "பஹ்லோல் கானின் படைகளை விரட்டியடித்து விட்டேன். இந்தாருங்கள் அவனுடைய திருக்குரான்" என்று அதைக் கொடுத்தான். சிவாஜி திருக்குரானுக்கு முத்தம் கொடுத்துவிட்டு, பல்லக்கைக் காட்டி "இது என்ன?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டார்.

சேனாதிபதி திரைச் சீலைகளைத் திறக்க, உள்ளே அழகே உருவான ஒரு பெண் இருந்தாள். இவள் பஹ்லோல்கானின் மனைவி. இவளைத் தங்களுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தேன் என்றார் சேனாதிபதி. சிவாஜி அவளிடம், "அம்மா! நீ உண்மையிலேயே அழகாகத்தான் இருக்கிறாய். நான் உன் வயிற்றில் பிறந்திருந்தால் நானும் அழகாக இருந்திருப்பேன்" என்று கூறி விட்டு அவளையும் திருக்குரானையும் பஹ்லோல்கானிடம் சர்வ ஜாக்கிரதையாகத் திருப்பி ஒப்படைக்கும்படி மற்றொரு அதிகாரிக்கு உத்தரவிட்டார். பின்பு சேனாதி-பதியிடம் "நீ இத்தனை நாட்கள் என்னோடு இருந்தும் இன்னும் என்னைப் புரிந்து கொள்ளவில்லையே! பிறர் மனைவியை அபகரிப்பதோ அல்லது அவர்களுடைய மத நூல்களை அவமானப்படுத்துவதோ ஒரு உண்மையான வீரனுக்கு அழகல்ல. அதனால் நமக்கு அழிவுதான் உண்டாகும்" என்றார்.

பார்த்தீர்களா, எதிரியாக இருந்தாலும் அவனது மனைவியையும் அவன் சார்ந்த மதத்தையும் உயர்வாக மதிக்கும் பண்பு எத்தனை உயர்ந்தது! பிற பெண்களைத் தாயாகவோ சகோதரியாகவோ கருதும் பண்பாடு அருகிவரும் இன்றைய காலகட்டத்தில் சிவாஜியின் வாழ்க்கை எமக்கு ஓர் எடுத்துக்காட்டு. அத்தோடு பிற மதங்களை மதித்து அவற்றுக்கு உரிய மரியாதையை வழங்கும் மரபு போற்றப்பட வேண்டியது. மாணவர்களாகிய நாமும் சிறுவயதிலிருந்து இத்தகைய நல்ல பண்புகளை எம்மிடம் முயன்று வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அன்பளிப்பு ரூ. 10.00